REGD No. M 4142

# திராவிடநாடு

விலை அணு 2.
சிலோன் 15 சதம்

மலர் 10 | 20—4—52 | இதழ் 42

# துரோகி

—[அண்ணல்]—

"இஷ்டம் போல் வரி வசூலிக்கிறாய். பணம் தேவையென்றால் புது வரி போடுகிறாய். இதைப் பொறுக்க மாட்டோம்!"

"ஆமாம்—இனி, நீ, எமது அனுமதி பெறவேண்டும் புதுவரி போட"

"அது மட்டுமல்ல! உனக்குப் பிடிக்காதவரையெல்லாம் பிடித்து அடைக்கிறாயே, சிறைக்குள்—அதுவும் இனி கூடாது. தெரியுமா?"

"குற்றஞ் செய்திருந்தால் அவனை, கோர்ட்டிலே நிறுத்தி, விசாரித்த பிறகே, சிறைக்குள்ளே போடலாம் புரிகிறதா!"

* * *

திகைத்தான் மன்னன்! 'போடு கையெழுத்து' என்று முழக்கமிட்டது, பார்லிமெண்ட். "நான் மன்னனல்லவோ?" என்று மமதையோடு கேட்டான். 'ஆமாம் அதனால்தான் கேட்கிறோம்' என்றனர், கூடியிருந்தோர். 'மக்களின் பிதாவல்லவோ நான்?' என்று, பரிதாபத்தோடு கேட்டான். மறுக்கவில்லை நாங்கள் மைந்தர்கள் கேட்பது இது. இதிலேன் தயக்கம் உமக்கு! சாதாரணமான கோரிக்கைதானே மன்னவா! என்று, பதில் தந்தனர் பார்லிமெண்டு உறுப்பினர்கள். 'மன்னன் கடவுளின் பிம்பம்!" என்று, ஞாபகம் வந்தவன் போல மிடுக்கோடு சொன்னான் அவன். அவர்கள் மருளாமல், கூறினர்—"அதனால் தான் கேட்கிறோம்" என்பதாக. விழித்தான்! முறைத்தனர்!! பெருமூச்சு விட்டான்! புன்சிரிப்போடு பார்த்தனர்!! உறுமினான்! சீறினர்!!

* * *

சோலைக்குள் புகுந்த யானை போல, சுந்தர நடைபோட்டுக் கொண்டிருந்த மன்னர் பரம்பரையின், வழக்கமான தர்பாருக்கு, பிரிட்டிஷ் பூமியிலே, வெடி வைத்தனர், பார்லிமெண்டார் — 1628ம் ஆண்டில். ஏதேச்சாதிகாரத்தோடு, இறுமாந்து கிடந்த முதலாவது சார்லஸ் முன் "உரிமை சாசனம்" எனும், ஒப்பந்தமொன்றை நீட்டினர். மன்னன் குமுறினான்—பதறினான். ஆனால் பார்லிமெண்டிலே, பகையஞ்சா வீரர் போலக் கிடந்த மூவர், முரசொலி கொட்டினர்—'மமதையை வளரவிடோம். மக்களை மதியாதவனை, மன்னனாக ஏற்கோம்' என்பதாக. சர் ஜான் எலியட், ஜான் பிம், தாமஸ் வெண்ட்வொர்த் என்கிற மூன்று பார்லிமெண்டு உறுப்பினரும் முனைந்துநின்றனர், உரிமை சாசனம் நீட்டி. பணமில்லாததாலும், பக்கத்து நாடுகளைப் பகைத்துக் கொண்டதாலும் வழி தெரியாது விழித்த, சார்லஸ் மன்னன், கையொப்பமிட்டான். பணிந்தான். உரிமை சாசனம் எழுதப்பட்டது. 'அரசு, எதையும் செய்யும்' என்றிருந்த முறைக்கு, முதல் சாவுமணி, அடிக்கப்பட்டது. பெருமூச்சு விட்டான், கடவுளுக்கு அடுத்தபடி தானென எண்ணிக் கொண்டிருந்த, சாகசக்காரன் சார்லஸ். தன்னிஷ்டப்படி நடக்கமுடியாதவாறு தடுக்கும் பார்லிமெண்டை நினைத்து, வெகுண்டான். ஆனால், போர்முழக்கம் செய்யும் பிரான்சும்—ஸ்பெயினும் கருத்தில் பட்டன. கலங்கினான்—வேறுவழில்லையேயெனவிழித்தான்— உரிமை சாசனத்தில் கையொப்பமிட்டான்.

* * *

"அப்பாடா! கையெழுத்திட்டானும்—மன்னன்"

"விதவிதமான வரிகள் இனிக் கிளப்பாதப்பா!"

"சித்ரவதையன்றோ செய்துவிட்டான்—"

"இல்லையே என்றால்' 'இழுத்துவா சிறைக்கு' என்றல்லவோ கர்ஜித்தான்"

"மழை ஓய்ந்தது—தொல்லை இனி இருக்காது. மகாவீரர்கள் நமக்காக வாதாடிய மூவரும்"

இவ்விதம் மகிழ்ச்சியோடு, பேசிக் கிடந்தனர், மக்கள். அவ்வளவு தூரம் அவர்களைக் கசக்கிப்பிழிந்து, வரிவசூலித்தான் — தாராதோரை சிறையில் நிரப்பினான். இவ்வளவு கொடுமைகளோடு வரிவசூலித்தது ஏன் தெரியுமோ? மக்களுடைய நன்மைக்காகவல்ல! நாடு சீர்பெறும் காரியங்களைச் செய்வதற்காகவுமல்ல!!

சார்லஸ், தனக்குப் பெண்தரு மாறு, ஸ்பெயின் தேசத்து மன்னனைக் கேட்டான். மறுக்கப்பட்டது,

★

மக்கள் வாழ்த்த, பாராளும் சபைக்குச் சென்றான். பதவி ஆசையால் துரோகி ஆனான்.

அவன் முடிவு......?

ஸ்பானிய மன்னனுல். பெண் கொடுக்காத மன்னனை எதிர்த்து ஒழிக்கக் கிளம்பினன்—படைகருப் பணம் வேண்டுமல்லவா? மக்களை வதைத்தான்!

பெண் கொடுக்காத மன்னனுடன் மட்டுந்தான் போர் முழக்கம் செய்தானென எண்ணுதீர்கள்—பெண்கொடுத்த பிரான்ஸ் மன்னனுடனும் போர் தொடுத்தான்! மனைவி தந்தவனேடும் போர்! மகளைத் தராத நாட்டுடனும் போர்!!—இந்தப் போர்களை நடத்த, மக்களை இம்சித்து, வரிமேல்வரி — பணம் கொட்டபபட்டது பொக்கிஷத்தில். பதைத்தனர் மக்கள்! மன்னனே தன்னை மதியாத நாட்டோடு போர் துவங்கத் துடிக்கிறன்!! இந்த 'மதோன்மத்த நிலை'' கண்ட மக்கள் சீறும் புலிகளாயினர்.

"நாம் வதைகிறேம் — மன்னன் துந்துபி முழக்குகிறன்''

"அவனுக்கு பொழுதுபோக்கு போர் நடத்துவது. நமக்கெல்லாம் உயிரின் வாதை''

"இந்த அநீதியைக் கேட்பாரில்லையா?''

என்று, குமுறிய மக்களின் சார்பில்தான், உரிமை சாசனம் நீட்டப்பட்டது. உரத்த குரலெடுத்துப் பேசினர், ஜான் எலியட், ஜான்பிம், தாமஸ் வெண்ட் வொர்த் ஆகிய மூவரும். வெற்றியும் பெற்றனர், உரிமை சாசனத்துக்கு மன்னனும் பணிந்தான். மக்கள் மகிழ்ந்தனர்! தமக்காக வாதாடிய மூவரையும் போற்றினர்—புகழ்ந்தனர்.

"மாவீரன் எலியட்''

"நம் மதிப்புக்குரியவன் பிம்''

"மக்கள் நண்பன் வெண்ட் வொர்த்''

இவ்விதம், நாடு, பேசிற்று மூவரையும் குறித்து. சார்லஸோ, தனக்கேற்பட்ட நிலையெண்ணி துடித்தான். 'சமயம் வாராதா?' என எண்ணினன். "இந்த மக்களென்ன இப்படிக் கிளம்பிவிட்டார்களே!'' என்ற கலக்கத்தால், கலங்கினன். ஆத்திரம், அருவருப்பு, கோபாவேசத்தோடு கிடந்த அவனுக்குத் தக்க யுத்தி புகட்டியது நாடு. தறுதலை ஆட்டத்துக்கு, அடிமேல் அடிதந்தனர், மக்களுரிமைக்காகப் போராடியவர்கள். இங்கிலையில், வீம்புக்காகத் தொடர்ந்த போர்களையும் ஒரு முடிவுக்கு கொண்டுவரவேண்டியவனுன். பிரான்சுடனும், ஸ்பெயினுடனும் சமாதானம் செய்துகொள்ள வேண்டியவனுனன். இந்த நிலைகளால் அவனுடைய உள்ளம் அலைகடல்போல் கொந்தளித்தது. தனது வெறிப்போக்கை விரும்பாத மக்கள்மீது, தீராத வெறுப்பு கொண்டான். வெறுப்பை வெளிக்காட்டினுல் விபரீதம் விளையுமே! அதனுல், ஊமைபோலிருந்துகொண்டே, உரிமை சாசனத்தின் ஷரத்துக்களை மீற ஆரம்பித்தான்.

பார்லிமெண்டுக்குத் தெரியாமல், புதுவரி, ஒன்றை நிர்ப்பந்தப்படுத்தினன். 'கப்பல் வரி' கட்டவேண்டுமென்றான். இது கண்ட பார்லிமெண்டு கொதித்தது. கூடி, மன்னனுடைய போக்கைக் கண்டித்தது. மன்னனே இப்போது மருளவில்லை! படைகளைக் காட்டி பார்லிமெண்டைக் கலைத்தான். 'நீங்கள் தேவையில்லை' என்று தெரிவித்தான். "மக்கள்யார்—நான் மன்னன்—பரமண்டலப் பிதாவின் பிம்பம்!'' என்று கர்ஜித்தான். பார்லிமெண்டு திகைத்தது—கலைக்கப்பட்ட பார்லிமெண்டு பதினேரு ஆண்டுகள் பிறகு, கூட்டப்படவேயில்லை.

* * *

11 ஆண்டுகள் — மனம்போன போக்கில், கொடுமைகள் புரிந்தான் சார்லஸ் மக்களை வதைத்தான்! மக்களுக்காகப் பரிந்துப்பேசிய ஜான் எலியட்டை சிறைக்குள்ளே தள்ளி, சித்ரவதை செய்தான்—கொன்றான். மக்களின் தூதன் சாகடிக்கப்பட்டான்! பார்லிமெண்ட் உறுப்பினன் எலியட்—பரிதாபமாகக் கிடந்தது அவன்பிணம், சிறைக்குள்!! மக்களின் தலைவன் அவன். மன்னனின் வெறிக்கு மாண்டான்! தனது மக்களுக்காக தன்வாழ்வை இழந்தான் அம்மாவீரன்! நாடு காடாயிற்று — மக்கள் மனந்துடித்தனர். மன்னனே சிரித்தான்! ஓயாது சிரித்தான்!!

திகைத்துக்கிடந்த மன்னனுக்கு இவ்வளவு தெம்பு வருமாறு செய்தவன், வெண்ட்வோர்த் ஆகும். மக்களுரிமைக்காக பார்லிமெண்டிலே பேசி, 'மக்கள் நண்பன்' என்று போற்றப்பட்டானே, அவனுல்தான் இவ்வளவு துணிவும் ஏற்பட்டது யாமுகத்தானுக்கு.

"உரிமை சாசனம்'' முடிந்தபின், சார்லஸ், பலப்பல யோசனைகளில் ஆழ்ந்தான். தனது நிலையை வலுவாக்கிக்கொள்ள என்ன செய்வதென ஏங்கியபோது தந்திரம், ஒன்று தென்பட்டது.

"மக்களின் நம்பிக்கை பெற்ற ஒருவனை நமக்கு சாதகமாக்கிவிட்டால்?''

'நல்லதுதன். ஆனுல்முடியுமோ இது?''

"ஏன், முடியாது! பெரும் பதவி தருகிறேன என்று தெரிவியுங்களேன்''

"பதவிக்குப் பணிந்துவிடக்கூடியவரா, அவர்கள்''

"மக்களின் நம்பிக்கையை எவர்தான் இழக்கவிரும்புவர் மன்னு!''

இவ்விதம், தனது சகாக்களுடன் ஆலோசனைகள் நடத்தினன். முடிவில் வலைவீசப்பட்டது! தாமஸ் வெண்ட்வொர்த் சிக்கினன்!!

"தாமஸ் — நீதான், நான். நம்பு என்னை. இந்த நாசகாலர்களை ஒழிக்க ஒத்துழைப்புத்தா-உன்னை ராஜ்யாதிபதி ஆக்குகிறேன்''

மன்னனின் வார்த்தை, தாமஸ், மனதில் ஆசைகளைத் தூண்டிற்று. தயங்கினன், பதில்பேச. பதவி ஒரு பக்கம்! தன்னைத் துதித்த மக்கள் மற்றோர் பக்கம்!!—திண்டாடினன், அவன். பதவி, தென்றலாகத்தென்பட்டது — அதனுல் விளையும் பகையோ புயல்போலத் தோன்றிற்று.

"மன்னு! மக்கள் தூற்றுவரே என்னை. மாபாவி; துரோகி, வஞ்சகன் என்றெல்லாம் இகழ்வரே''

"ஆமாம்! இகழத்தான் செய்வர்—அதனுல் என்ன? அவர்கள்நாவைத் துண்டிப்போம் அதிகாரத்தால்! துடுக்கடக்க சிறைச்சாலை இல்லையோ தாமஸ்?''

"பதவிக்காகத் துரோகியானேன் என்பரே!''

"சொல்லட்டுமே! சுகம்பெரிதா—சொல்லம்பு பெரிதா?''

"எனது நண்பர்கள் தூற்றுவரே''

"தூற்றினுல் துடுக்கு அடக்கு

(10-ம் பக்கம் பார்க்க)

# 'கண்ணீர்த் துளிகள்' பெற்ற காணிக்கை

## வியர்வை தந்த விருந்து

## இலட்ச ரூபாய் குவிந்தது

### பட்டியல் பாரீர்!

திராவிட முன்னேற்றக் கழகம், கண்ணீர்த் துளிகளிலேதான் பிறந்தது. இலட்சத்தை அலட்சியம் செய்து விட்டு, இலட்சியத்திற்காக வெளியேறியவர்கள், அமைத்த கழகத்திற்கு ஆரம்பத்தில் செப்புக் காசும் இன்றித்தான், கழகச் செயல்களைத் துவங்கினார்கள். ஆனால் மக்கள் முகமலர்ச்சியோடு, ஒவ்வொரு சமயமும், காணிக்கை செலுத்தி, நம் கடமையைச் செய்யும்படி பணித்து வருகிறார்கள். கழகம் துவங்கிய நாளிலிருந்து, இன்று வரை மக்கள் அளித்துள்ள வெள்ளிப் பணங்களின் கணக்கு நமக்கு மகிழ்ச்சியையும், மாற்றாருக்கு மருட்சியையும் தருகிறது. மக்கள் நம்பால் காட்டும் நம்பிக்கையும், அன்பும் பிறர் நெஞ்சில் பொறாமையாகப் புகைந்து, வயிற்றெரிச்சல் தீயாகி, தினம் ஒருவிதமான திட்டுதல் ஜுவாலையோடு எரிகிறது. நாம் என் செய்வது? நம் தொண்டினை, மக்கள் கண்டு மனம் உவந்து செய்கிறார்கள்!

மாநாடுகள், நாடகங்கள், பொதுக் கூட்டங்கள், இசையரங்குகள் பெயரால் மக்கள் நமக்கு காட்டியுள்ள உற்சாகம் நம் தொண்டைப் பலப்படுத்துகிறது. நம் ஆர்வத்திற்கு புதுவேகத்தை உண்டாக்குகிறது.

மாநில மாநாடு, கழகக்கட்டட நிதி, கழகச் செலவுகள் இவைகளுக்காக திராவிடம் தந்துள்ள வெற்றிக் காணிக்கையைப் பாருங்கள். மக்களின் மனம் தெரியும். மாநில மாநாட்டு மொத்தவரவு ரூ. 74067, கழகக்கட்டிட நிதிக்காக மக்கள் அளித்த தொகை ரூ. 25105, கழகச் செலவிற்காக தந்தது ரூ. 2500— ஆக மொத்தம் ரூ. 101669.

இலட்சத்தைத் தாண்டிவிட்டது, இலட்சிய வீரர்களுக்கு, மக்கள் அளித்த காணிக்கை. அதனால் தான் எரிச்சலும், ஏசலும், பிறக்கிறது, புகை மனங் கொண்டவர்களிடமிருந்துகூட,

சில முக்கிய கணக்கு விவரங்கள் தரப்படுகிறது.

#### மாநில மாநாட்டு வரவு — செலவு

| | |
|---|---|
| டிக்கட் விற்பனை | 48434—0—0 |
| மாவட்ட நன்கொடை | 21933—0—0 |
| ஸ்டால் வாடகை | 3700—0—0 |
| மொத்த வரவு | 74067—0—0 |
| மாநாட்டு மொத்த செலவு | 37398—2—9 |
| மாநாடு முடிந்து, தலைமைக் கழக செலவு | 1864—4— |
| மொத்த செலவு | 39262—6—9 |
| மிகுதி இருப்பு | 34804—9—3 |

#### மாநில மாநாட்டுக்கு மாவட்ட நன்கொடை விவரம்

| | |
|---|---|
| சென்னை | 2000—0—0 |
| செங்கற்பட்டு | 2175—0—0 |
| திருச்சி | 2000—0—0 |
| தஞ்சை | 2000—0—0 |
| நாஞ்சில் | 2000—0—0 |
| வடாற்காடு | 1650—0—0 |
| தென்னாற்காடு | 1000—0—0 |
| மதுரை | 2000—0—0 |
| கோவை | 2100—0—0 |
| சேலம் | 2000—0—0 |
| ராமநாதபுரம் | 1005—0—0 |
| திருநெல்வேலி | 1125—0—0 |
| ஆமதாபாத் | 150—0—0 |
| பம்பாய் | 101—0—0 |
| செய்கோன் | 151—0—0 |
| புதுச்சேரி | 106—0—0 |
| இலங்கை | 200—0—0 |
| ரங்கோன் | 150—0—0 |
| தனிப்பட்டோர் நன்கொடை வரவு | 20—0—0 |
| மொத்த நன்கொடை வரவு | 21933—0—0 |

#### கழகக் கட்டிட வரவு செலவு

| | |
|---|---|
| நன்கொடை வரவு நாடகங்கள் மூலம் | 9000—0—0 |
| சென்னை | 3000—0—0 |
| திருச்சி | 1000—0—0 |
| காஞ்சிபுரம் | 1000—0—0 |
| கோவை | 4000—0—0 |
| தென்னாற்காடு | 1000—0—0 |
| வடாற்காடு | 1000—0—0 |
| சேலம் | 1000—0—0 |
| நாகர்கோவில் | 1000—0—0 |
| சோழவந்தான் | 300—0—0 |
| தனிப்பட்டோர் நன்கொடை | 3000—0—0 |
| மொத்த வாவு | 25300—0—0 |
| கழகக் கட்டிட கிரயம் (மைனருக்குத் தரவேண்டிய ரூ 5615 நீக்கி) | 19385—0—0 |
| ஸ்டாம்ப் பேப்பர் | 2000—0—0 |
| ரிஜிஸ்டர் செலவு | 200—0—0 |
| ரிப்பேர் செலவு | 2420—0—0 |
| வீடு வாங்க பல தடவை பிரயாணம்—தரகர் செலவு | 500—0—0 |
| வக்கீலுக்கு கமிஷன் | 500—0—0 |
| திறப்பு விழா செலவு | 100—0—0 |
| மொத்த செலவு | 25105—0—0 |
| இருப்பு | 195—0—0 |

ஏறத்தாழ மூன்றாண்டு காலத்திற்குள், கண்ணீர்த் துளிகளுக்கு, மக்கள் அளித்துள்ள காணிக்கை இலட்சம்.

செப்புக்காசுமின்றி செயல் புரியத் தொடங்கினோம். இன்று கழகத்திற்கொரு சொந்தமான கட்டடம் — இப்பொழுது மிகுந்துள்ள தொகையில் சொந்த அச்சகம் நிறுவ இருக்கிறோம். அதிலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கென தனி தினசரி தொடங்கப் போகிறோம் என்பதை எண்ணும் பொழுது பூரிப்படைகிறோம்.

மக்கள் கண்ணீர்த் துளிகளுக்கு காணிக்கை தந்துள்ளார்கள்—இலட்சம் ரூபாய்களுக்கு மேல். மக்கள் ஆர்வம் மனம் மகிழ்ச்சியைத் தருகிறது. அந்த மகிழ்ச்சி கலந்த நன்றியை, மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

★

# இலங்கை ★ ★ கொடுமை

"இலங்கை வாழ் திராவிட மக்களுக்கு உரியதும் நியாயமானதுமான குடியுரிமையை வழங்க மறக்கும் இலங்கை சர்க்காரின்போக்கை இம்மாநாடு கண்டிப்பதுடன், மேற்படி உரிமைகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை சர்க்காரை இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது"

* * *

சென்னையில் பெருமிதமாக நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக முதலாவது, மாநாட்டில், இலங்கை வாழ் திராவிடர் சம்பந்தமாக, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஒரு பகுதி இது. பொன்விளையும் நாடிருந்தும், புசிக்க வழியில்லாததால் கூலிகளாய், கோலைழகளாய், தேயிலைத் தோட்டங்களிலே உழைத்துமெலிவோர், நமது சகோதரர்கள்தான். இலங்கையின் செல்வத்துக்கு நமது சகோதரர்களின் வியர்வை, மிக மிக அதிகமாகச் சிந்தப்பட்டு வருகிறது. பூச்சிக் கடிக்கும், தாக்கும் நோய்க்கும் ஆளாகி அவர்கள் படும் சஞ்சலங்கள் மிக மிக அதிகமாகும். உழைத்து, தமக்கு செல்வம் தரும், இந்த ஏழைகள் கூட்டத்துக்கு சிறிது நன்றியையும் தெரிவிக்காமல் நடந்து வருகிறது, இலங்கை சர்க்கார்.

இலங்கை நமக்கு அருகிலிருக்கும் நாடு என்பதால் அதற்கேற்படும் தொல்லைகளுக்காக வருந்தவும், நலன் பெறும்போது மகிழவுமான நிலைமைக்கு நாம் எப்போதும் இருந்து வருகிறோம்.

* * *

இலங்கையில் குடியேறிய நம்மவர்கள், இலங்கையின் மக்களாக வாழ, தமது விருப்பத்தைத் தெரிவித்தே வந்திருக்கின்றனர். இலங்கையின் சட்ட திட்டங்களையும், ஆட்சி முறையையும், ஏற்று நடப்பதாக வாக்குறுதி தந்துள்ளார்கள். இலங்கையின் பிரஜைகளாக வாழ, உறுதியளித்திருக்கும், இந்த உழைப்பாளர் கூட்டத்தை, ஓரவஞ்சனையோடு நடத்துகிறது, இலங்கை ஆட்சி.

இதன் உச்சகட்டம், இப்போது அவர்களுக்கு வோட்டுரிமை இல்லாமல் செய்திருப்பதுதான்.

இலங்கையின் பிரஜைகள், அவர்கள்—இலங்கைத் தீவுக்காக பாடுபடும் கூட்டம் அது—தீவின் செல்வம் வளர தங்கள் இரத்தத்தைச் சிந்தி பாடுபடுகின்றனர். ஆனால், அவர்களுக்கு வோட்டுரிமை இல்லை! வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுகிறது!!

1951 ஆகஸ்டு 6ந் தேதிக்குள் சுமார் 2½ இலட்சம் மக்கள் தம்மை, இலங்கை பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளுமாறு, விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால் இவர்கள் அனைவருக்கும், வோட்டுரிமை தரப்படவில்லை.

விரைவில் நடைபெறப் போகிற பொதுத்தேர்தலில், 8500 பேருக்கே வோட்டுரிமை தரப்பட்டிருக்கிறது-1950-ல் தயார் செய்யப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி.

1948ல் இருந்ததில் நூற்றுக்கு

# தேனிக் கலவர வழக்கு நிதி

"திராவிடநாடு ஜாமீன்"—"ஆரிய மாயை"—"காந்தியார் சாந்தியடைய" — "கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா" ஆகிய வழக்குகளில், அரசாங்கம் நமக்கு இழைத்த அநீதிகளுக்கு எதிராக, நீதிமன்றங்களிலே நாம் நீதி வழங்கப் பெற்றோம். அப்படி வழங்கப்பட்ட நீதியின்மூலம், நாம் எவ்வளவு தூய்மைநெறி படைத்தோர் என்பதை உலகறிய, வழி ஏற்பட்டது.

அரசாங்கமும், ஆளுங் கட்சியினரும் நமக்கு எவ்வளவு அநீதி இழைத்தாலும், நேர்மையும், நடுவு நிலைமையும் நிலவும் நீதிமன்றத்தில், நாம் ஏறிநின்று நீதி கோருவோமேயானால், நல்ல தீர்ப்பு நம் பக்கமே என்பது உறுதியாகிவிட்ட உண்மையாகும்.

அந்த உறுதிப்பாட்டைக் கடைபிடித்துதான், தேனியில் 4–7–51ல் காங்கிரஸ்காரர்கள் நடத்துகொண்ட அநீதிமுறையை அம்பலப்படுத்தவும், தி. மு. க-வின் தூய நிலையைத் தெளிவுபடுத்தவும், நாட்டிற்கோர் நல்ல தீர்ப்பு வாங்கித்தரவும் "தேனிக் கலவர வழக்கை" நீதி மன்றத்திலே தொடுத்துள்ளோம். வழக்கில் என். ஆர். தியாகராசன் உள்பட ஏறத்தாழ நாற்பது பேர்கள் எதிரிகளாக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். நாம் நல்ல தீர்ப்பைப் பெற, வழக்கை விடாமுயற்சியுடன் நடத்தவேண்டியிருப்பதோடு, உயர்நீதிமன்றம்வரை சென்று பார்க்கவேண்டிய அவசியத்திலும் இருக்கிறோம். 'தேனிக் கலவர வழக்கில்' கிடைக்கும் வெற்றி, கழகத்திற்கு அசைக்க முடியாத ஆக்கத்தைத் தருவதாகும். அந்த 'நல்ல தீர்ப்பு' அவ்வளவு எளிதிலே கிடைக்கக் கூடியதல்ல, பெரும் பொருட்செலவின் பேரிலேயே கிட்டக்கூடியது என்பதைக் கழகத் தோழர்கள் அனைவரும் நன்கு உணர்வர்.

ஆகவே, பெரியோர்களே! தோழர்களே! ஆர்வமிக்க இளைஞர்களே! நீங்கள் வரையாது வழங்கும் பொருளுதவியின் பேரில்தான், வழக்கின் வெற்றி இருக்கிறது. எங்கே, உங்கள் முயற்சியைக் காட்டி, வெற்றிக் களிப்பை ஊட்டுங்கள்!

வழக்கின் வரவு—செலவு பற்றிய முழுப் பொறுப்பையும் கவனித்துக் கொள்ளும் பொறுப்பாளராகத் தோழர் இரா. நெடுஞ்செழியனை விட்டிருக்கிறேன்.

எனவே, தோழர்களனைவரும் தனிப்பட்டோரிடம் வசூல் செய்தும், பொதுக்கூட்டங்களில உண்டியல் குலுக்கியும், நாடகங்களில் கிடைப்பதில் ஒரு பகுதியை நிதியாக ஒதுக்கியும், "தேனிக் கலவர வழக்கு நிதி" என்று குறிப்பிட்டு,

இரா. நெடுஞ்செழியன்
பொறுப்பாளர்
தேனிக் கலவர வழக்கு நிதி
12-வைத்தியநாதமுதலித் தெரு,
சேத்துப்பட்டு, சென்னை 10.

என்ற முகவரிக்கு உடனடியாக அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

சி. என். அண்ணாதுரை
15—4—52

ஐவரே, வரும் தேர்தலில், வோட்டர்கள். நூற்றுக்கு ஐந்து!

1949ல் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி பார்த்தால், 1¾ லட்சம் மக்களுக்கு, வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றோ! 8500 பேருக்குத்தான்!!

* * *

இலங்கையில் வாழும் லட்சம் மக்களில் 8500 பேருக்கு மட்டுமே — வாக்களிக்கும் உரிமை. இந்த கோரத்தை எவர்தான் சகிக்கமுடியும்? மக்கள் இருக்கிறார்கள் உயிரோடு—உழைத்துக்கொண்டேயிருக்கிறார்கள் தீவுக்காக. ஆனால் அவர்கள் அத்துணை பேருக்கும், வோட்டுரிமை இல்லை. தம்மை இலங்கையில் குடிமகன், எனப்பதிவு செய்துகொண்டவர்களுக்கும் இல்லை.

ஜனநாயகம் கேலி செய்யப்படும் இந்த நிலையை, இந்தியத் தூதர் கேசவமேனன், இலங்கை சர்க்காருக்குத் தெரிவித்தாராம். அதற்கு டட்லீ சேனநாயகா தெரிவித்த பதில் 'என் செய்வது?' என்பதாகும். பார்லிமெண்டு கலைக்கப்பட்டு விட்டதால் தம்மால் எதுவும் செய்வதற்கில்லையென்று தெரிவித்திருக்கிறார்—அதாவது மறுத்துவிட்டார் மறுத்தபோது, "அடுத்த தேர்தலின்போது தங்கள் கோரிக்கையை கவனிக்கிறோம்" என்றும் அவர் தெரிவித்தாராம். அடுத்த தேர்தல் எப்போது? ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு! இந்த அன்புரை, கண் துடைப்பே அன்றி, வேறல்ல.

வாழும் மக்களுக்கு இந்த அடிப்படை உரிமையைத் தரமறுக்கிறது, இலங்கை சர்க்கார். தமக்காகஉழைக்கும் மக்களை உதறித்தள்ளுகிறது—இதுபோன்ற இக்கட்டுகளால் வாழச்சென்ற நமது சகோதரர்கள் பலமுறை வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அப்போதெல்லாம் நாம் துடித்தோம்! நமது சென்னை சட்டசபையிலும் பலர் தீர்மானம் நிறைவேற்றினார்கள்!

ஆனால் எதுவும் செய்யமுடியவில்லை—அதிகாரம் டில்லிவசம் இருப்பதால். இன்று நிலை மோசமாகி இருக்கிறது. இதற்கான பெரும் பங்கு டில்லியைத்தான் சாரும். வெகுதூரத்தே இருக்கும் டில்லி, இலங்கைவாழ் நம்மவர்பற்றி, அக்கரை காட்டவில்லை — முன்பு. இப்போது அடிப்படை உரிமையை இழந்து நிற்கிறார்கள் அவர்கள். ஜனநாயகத்தைக் கேலி செய்கிறது, அருகே இருக்கும் இலங்கை சர்க்கார். விழிகளில் கண்ணீரோடு நிற்கின்றனர் நமது சகோதரர்கள்! இந்த வேதனை, நல்லதல்ல. மக்களுரிமையைத் தடுப்பது, பலன் தராது. இந்தப்பாதையில் செல்ல வேண்டாம் என டட்லீ சர்க்காருக்கு அன்போடு கூறிக்கொள்ள விரும்புகிறோம் — வழிவகைகளைச் செய்து நமது நல்லெண்ணத்தைக் கருகாமலிருக்கச் செய்துகொள்ளட்டும்.

## "பகுத்தறிவு"

நமது கழக முன்னணி வீரர் தோழர் ப. கண்ணன் அவர்களால் சேலம்—சலகண்டாபுரத்திலிருந்து தமிழுலகுக்குத் தரப்படும் "பகுத்தறிவு" மாத வெளியீட்டின் சித்திரை இதழ் காணப்பெற்றோம். சிந்தைகளித்தோம். புதிய முறைகளோடு, அருமையான கருத்துரைகள் தாங்கி வெளிவரும் பகுத்தறிவின் பணியைப் பாராட்டுகிறோம்—வாழ்த்துகிறோம். விலை 4 அணாதான் 'பகுத்தறிவு' சலகண்டபுரம், சேலம் Dt., என்பதே அதன் முகவரி. அறிவுலகச் செல்வர்கள்பெற்று மகிழவேண்டிய மாத வெளியீடு, இது.

## மஜீத்குடும்ப பாதுகாப்பு நிதி

தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நெல்லிக்குப்பம் பகுதியில் காங்கிரசுக்கு எதிராக வேலைசெய்ததற்காக, அநியாயமாகக் கொலையுண்ட, நம் கழக வீரன் மஜீத் அவர்களின் குடும்ப பாதுகாப்பிற்காக, நன்கொடையனுப்பியுள்ள தோழர்கள் விவரம் கீழே தரப்பட்டுள்ளது. மேலும் நிதிதரும் தோழர்கள், காஞ்சிபுரம், 'திராவிட நாடு' நிலைய முகவரிக்கே அனுப்பும்படி வேண்டிக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| திருச்சி எம். எஸ்- மணி மூலம் | 15—0—0 |
| எம். ராமய்யன், கீரப்பாளையம் | 1—0—0 |
| கே. தங்கமுத்து, வள்ளிப்பாளையம் | 1—0—0 |
| கே. பி. ஆறுமுகம், கள்ளிபாளையம் | 2—0-0 |
| கே. மாரியப்பன், நீலகிரி | 2—0—0 |
| இளங்கோ இளைஞர் மன்றம், அமிஞ்சிக்கரை | 5—0—0 |
| டி. மயில்வாகனம், கொழும்பு | 2—0—0 |
| கே. டேனியல், மதுரை | 1—0—0 |
| டி. டி. ஆசிர்வாதம், ஜபல்பூர் | 6—0—0 |
| முத்து, வைத்தியர். கிருட்டினன்—டெல்லி | 7—0—0 |
| ரூ. | 42—0—0 |

## தினத்தாள் நன்கொடை

சென்னையிலிருந்து, வெளிவரவிருக்கும் கழக தினத்தாள் நிதியாக, நாட்டில் நடைபெறும், தி. மு. கழக பொதுக்கூட்டம் ஒவ்வொன்றின் சார்பிலும், ரூ. 5-0-0 அனுப்பவேண்டும் என்று ஈரோடு பொதுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டதை யொட்டி, கூட்டம் நடத்தும் தோழர்கள், தவறாது அனுப்பி வருகிறார்கள். இனி நடைபெறும் கூட்டங்களின் சார்பிலும், கழகத் தோழர்கள், தினசரிக்குரிய நன்கொடைத் தொகையை அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| சென்றவாரம்வரை ரூ. | 25—0—0 |
| நெல்லிக்குப்பம், தியாகம்மாள் மூலம் | 5—0—0 |
| மரக்காணம் | 5—0—0 |
| வெ. பெரம்பூர் | 5—0—0 |
| ரூ. | 40—0—0 |

(கடந்தவாரம் வெங்கடசமுத்திரம் வரவு ரூ. 5 என்பதை மோலையானூர் வரவு என்று திருத்திக் கொள்ளவும்)

## வருந்துகிறோம்

நமது பணிமனையைச் சேர்ந்த தோழர் வசந்தனின் அருமைத் தாயார் 15-4-52-ந் தேதியன்று, நோய் வாய்ப்பட்டிருந்து, இயற்கை எய்தினார்கள். அவரது பிரிவு, வசந்தனுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும், ஆற்றொணாத் துயரைத் தருவதாகும். தாயை இழந்து நிற்கும் வசந்தனுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# திராவிடநாடு

காஞ்சி] 20—4—52 [ஞாயிறு


# பரிதாபம்

★

பரிதாபத்தோடு கூறுகிறார்கள் வெளிநாடுகளிலிருந்து வரும், எவரும்.

அமெரிக்காவின் தூதர்கள் பல இடங்களையும் சுற்றிப்பார்வையிட்டுச்சென்று பக்கம் பக்கமாக, எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள் —பரிதாபத்தோடு.

சின்னஞ் சிறு நாடு ஜப்பான், கூறுகிறது—'எமது உதவி வேண்டுமா' என்று.

எங்குபோனாலும் எப்போது பார்த்தாலும், இந்தப் பரிதாபத்தைக் குறித்தே பேசுகிறார்கள் — இந்திய மந்திரிகளும் அவர்தம் தலைவர் பண்டித நேருவும்.

'பெரியநாடு இது. ஆனால் பின் தங்கிக்கிடக்கிறது' என்று துவங்கி, 'நாடு வளம்பெற, சிக்கல்கள்தீர, தொழில் வளர்ச்சிவேண்டும்' என்று எல்லோரும் கூறுகிறார்கள்.

அமெரிக்கா பணமாகத் தருகிறேன் என்கிறது! 'ஆகா — ஏற்றுக் கொள்கிறோம். யார் வேண்டுமானாலும் வந்து பணத்தைப்போடுங்கள். பாதுகாப்பு தருகிறோம்' என்று, பல்லிளித்துப் பாடுகிறது, டில்லி சர்க்கார்.

அண்மையில் நடந்து முடிந்த மாஸ்கோ மாநாட்டிலும், 'இந்தியாவுக்கு ஏராளமான ஆலைகள்தேவை' என்பதாக, வால்சந்த் ஹீராசந்த் என்கிற பெரிய முதலாளி தெரிவித்திருக்கிறார் ரஷ்யாவும், இந்தக் கோரிக்கையை 'பரிதாபத்தோடு' கவனித்ததாகப் பத்திரிகைகளில் பார்க்கிறோம்.

வளர்ந்துள்ள நாடுகள் அனைத்தும் 'வறுமை'யால் வாடும், இந்த உபகண்டத்தை, பரிதாபமாகவே பார்க்கின்றன.

இன்று இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள முக்கிய தேவைகள் (1) உணவு (2) ஆலைகள் என்பதாக எல்லா அறிஞரும் கூறுகிறார்கள்—வலியுறுத்துகிறார்கள்.

உணவுப்பிரச்சினை உடனடித் தேவை. தொழில் ஆலைகள், நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும்—ஏழ்மையைப் போக்கும்.

ஆலைகள் அவசியம்! — இதை மறுப்பார் இல்லை. ஆலைகள் வளர்ந்தால்தான், வறுமை தொலைபமுடியும்—வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியஏதுவாகும். செல்வம்கொழிக்கும்.

இன்றைய பொருளாதாரயுகமே, ஆலைகளின் உற்பத்தியில் தான் அமைந்துகிடக்கிறது. ஆகவே, ஆலைகளுக்கு, இவ்வளவு முக்கியத்துவம் தந்து பேசப்படுகிறது.

ஆலைகளின் தேவையை எவரும் மறுக்கார் — 'கைராட்டை' சுற்றச் சொல்வோர்கூட எத்தனையோ ஆலைகளுக்கு அதிபதிபாக இருப்போர் தாம். ஆலைகள், அவ்வளவு முக்கியமானவையாயிருக்கின்றன

பொருளுற்பத்திகள் பரவுவது மட்டுமின்றி, மனித வாழ்க்கைத் தரம் உயரவும், ஏழ்மை அகலவும், ஆலைகள் ஓடுவது அவசியமாகும்.

இத்தகைய ஆலைகள் இந்திய உபகண்டத்தில் பெருகவேண்டுமெனக் கூறப்படுகிறது — நாமும் 'ஆம்!' என்றுதான் கூறுகிறோம், வலியுறுத்துகிறோம்.

ஆலைகள் பெருக வேண்டுமென்றால் — இந்திய உபகண்டமெங்கும் பலப்பல இடங்களில் புதிது புதிதான 'மில்கள்' ஓடவேண்டும் என்பதாகும்.

இப்போது இருப்பதைவிட இன்னும் பலமடங்கு, விதவிதமான, இயந்திரங்கள் இயங்கவேண்டும் — இந்த ஆசையை எவரும் மறுக்க முடியாது.

இப்போது இருப்பது! மிகமிகக் கொஞ்சம். உலகத்தார் கூற்றுப்படி. இப்போது இருப்பது, போதாது—வெளிநாட்டினர் கூறுகிறார்கள் இவ்விதம். இப்போது இருப்பது, தேவையைப்பூர்த்தி செய்யாது — நமக்கே தெரிகிறது இந்தஉண்மை.

இப்போது இருப்பது! இதைசிறிது நாம் சிந்திக்கவேண்டும் இதுபோதாது என்று கூறப்படுவதைப்பற்றியல்ல; இப்போது இருப்பது; எங்கெங்கே எப்படியெப்படி இருக்கிற என்பதைப் பற்றி.

இந்திய உபகண்டத்தில் ஆலைகளே இல்லையென்று கூறிடமுடியாது. இருக்கிறது! அவை எப்படி, எங்கே இருக்கின்றன.

தொழில் வளர்ச்சியே துரைத்தனத்தின் முதுகெலும்பு ஒரு'மில்' ஏற்பட்டால், அந்த வட்டாரத்தில் வேலைத் திண்டாட்டம் நீங்கும் ஏழ்மை ஒழியும்! எல்லோரும் நலம் பெற வழிகிடைக்கும்.

இந்தநிலை நாடெங்கும் இல்லை — எனினும் ஒருசில இடங்களிலேமட்டும் இருக்கிறது, ஆலைகள் அங்கு மட்டும் ஓடிக்கொண்டிருக்கின்றன— அந்த ஆலைகள் தயாரிக்கும்பொருள்களைநம்பியே முப்பதுகோடி மக்களும் இருக்கவேண்டியிருக்கிறது.

இந்திய உபகண்டம் மிக மிகப் பெரியது— அங்கே, ஒரு சில இடங்களில்மட்டுமே "ஆலைவளர்ச்சி"— உலகத்தோடு ஒப்பிடும்போது, அதிகமாக இல்லையென்றாலும் மற்றப்பகுதிகளை வைத்துப்பார்க்கும் போது அதிகமாக இருக்கிறது.

---

## சி. என். ஏ. உடல் நிலை

ஈரோடு பொதுக்குழுவிற்குச் சென்றிருந்த பொதுச் செயலாளர் சி. என். ஏ-வுக்கு லேசான சிறு வலி, நெஞ்சில் இருந்தபடியே இருப்பதால், மதுரையில் எக்ஸ்ட்ரே எடுத்துப் பார்த்ததில் நுண்ணிய வீக்கம் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று தெரிந்து, சென்னையில் மீண்டும் நாடித்துடிப்பின் அசைவுப் பரிசோதனை செய்யப்பட்டு ஓயாத உழைப்பின் காரணமாக ஏற்பட்டதே இந்தவலி என்றும், வேறு பயப்படத்தக்கது எதுவுமில்லை யென்றும் குறைந்தது மூன்றுமாதகாலம் நல்ல ஓய்வு கிடைத்தால் போதும் என்றும் தெரிவித்து, தக்க மருத்துவமும் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே தோழர்கள் இன்னும் தொடர்ந்து இரண்டு மாதங்கள் வரை கூட்டங்கள், விழாக்கள் என்று அழைப்புகள் விடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இப்போது இருக்கும் ஆலைகளில் அதிகம் இருக்கும் பிரதேசம் எது? கூசாமல் பதில் கூறமுடியும், "வடக்கு" என்று. 'துவேஷி' என்று பாய்வோருள்பட எவரும் இதை மறுக்கமுடியாது. தென்னாட்டை விட, வடநாடு தொழிலுற்பத்தியில் சிறந்து விளங்குகிறது—வடநாடு 'பணத்தோட்டம்!' தென்னாடு பிணக்காடு!!

இந்த உண்மையை நாம் சுட்டிக் காட்டும்போது, தேசீய நண்பர்கள் சீறத்தவறுதில்லை கோபிக்க மறப்பதில்லை.

அனந்தராமகிருஷ்ணன் சென்னை நகரத்தின் 'ஷரீப'—சிறந்த தொழிலறிஞர் என்று 'அந்த' வட்டாரத்தின் அர்ச்சனைக்குப் பிரியமானவர். அவர் சொல்கிறார்:-

"கடந்த கால் நூற்றாண்டில் தொழில்வளர்ச்சி சிலஇடங்களிலே மட்டுமே குவிந்தது. தென்னாட்டை விட பம்பாய் கல்கத்தா போன்ற இடங்களே வளர்ந்திருக்கின்றன."

சில இடத்தில் மட்டும் குவிந்தது! சொல்கிறார் அவர். "வேற்றுமைகளில்லாமல் எல்லா இடங்களிலும் சரிசமமாக தொழில் வளர்ச்சியிருந்தால் தென்னிந்தியா தொல்லைப்பட வேண்டியதே இல்லை. ஏனெனில் வேலையில்லாத் திண்டாட்டத்தால் தெற்கிலிருக்கும் ஏராளமான இளைஞர்கள் வேலை தேடி வெளியில் செல்லுமாறு ஏற்படுகிறது" இவ்விதம், பேசியிருக்கிறார், சென்னையில் ஏப் 13ந் தேதியன்று—இந்த வார்த்தைகளைக்கூறிக்கொண்டிருந்தபோது, 'இதென்னடா! நாம் பேசுவது திராவிடநாடு கேட்போர் பேசுவது போலிருக்கிறதே' என்ற சந்தேகம், அவருக்கே வந்துவிட்டது போலும்.

"வடக்குக்கும் தெற்குக்குமிடையே தாரதம்யம் இருக்கவேண்டுமென்று கூறுகிறவனல்ல நான்" என்று, தெரிவித்துவிட்டு, 'தெற்கிலே சிறந்த இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களது சக்தியெல்லாம் வீணாகிறது—இந்தியா முழுமையும் அலைகிறார்கள் வேலைதேடி. இங்கே ஆலைகளிருந்தால் இப்படி ஏற்படுமா? நமது சக்தி வீணாகத்தான் நேருமா! உழைக்க மனிதர்கள் இருக்கிறார்கள்— ஆலைகளுக்கான வசதிகளும் உள்ளன. ஆனால் ஆலைகள்தான் இல்லை!" என்பதாகக் கூறியிருக்கிறார்.

ஆலைகள் தெற்கே இல்லை!—இந்த உண்மையை மறுக்கமுடியாது. அதனால்தான், நாட்டையே பணத்தால் நிரப்பக்கூடிய டாடாவும், பிர்லாவும், டால்மியாவும் வடக்கே வளர்ந்து கிடக்கின்றனர்—சாதாரணமாக அல்ல, தென்னாட்டையே விலைக்கக்கூடிய அளவில்.

முதலையும் மீனும்! வடக்கும் தெற்கும்!!—இந்த நிலைமையிலிருந்து தெற்கு மீள்வது எவ்விதம். எப்படி இங்கே, ஆலை வளர்ச்சி, ஏற்படுமாறு செய்வது. புதிதாக ஆலைகள் ஏற்படுத்துகிறோம் வெளி மூலதனத்தால்—ஆனால் அந்த ஆலைகள் வளர எத்தனை ஆண்டுகள் ஆகும்? வடநாட்டோடு போட்டியிட எவ்வளவு காலம் பிடிக்கும்! மீன் முதலையாவது எளிதா? முதலை மீனை விழுங்கிவிடுமே, வளர்வதற்குள்!

இதை எண்ணும்போதுதான், நம்மை எதிர்ப்போருக்குத் தெளிவு ஏற்படமுடியும்.

ஆலைகள் இங்கே புதிதாகஅமைக்கப்படவேண்டும்—வடக்கே அப்படியல்ல.

வடக்கே, இனி ஆலைகள் தோன்றுவது, லாபத்துக்குமேல் லாபம்—வளர்ச்சிக்குமேல் வளர்ச்சி.

தெற்கே ஆலைகள் ஏற்படுவது—ஏற்பட்டால்?—புதிதாக.

புதிய ஆலை பழைய ஆலையோடு போட்டியிடுவது சாமான்யமா!

இந்த கேடு களையப்படவேண்டுமானால், 'வடக்கிலிருந்து வரும் ஆலைப்பொருள்களைக்கட்டுப்படுத்தி தெற்கில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு பாதுகாப்பு தரவேண்டும்.

பாதுகாப்பு தரும் அதிகாரம், டில்லியின் கையிலிருக்கிறது. டில்லியின்மூலவர்களோ வடநாட்டு பணமுதலையின் 'பரிவாரத்தினர்.' இந்நிலையில் இது சாத்யமாகவா ஆகும்? ஆகாது ஆகாது! நாம், பிற்பட்ட பிரதேசமாகத்தான்—என்றும் இருக்க நேரிடும்.

உலகில் இந்தியா பிற்பட்ட நாடு—இந்தியாவில் தெற்கு பிற்பட்ட பிரதேசம்.

இந்த நிலையைப் போக்க நாம் கூறும் முடிவுதான், 'திராவிடநாடு' நம்மை நாமே ஆள்வது—நமது தேவைகளை நாமே கவனித்துக் கொள்ளும் அதிகாரத்தோடு இருப்பது.

இதைக்கண்டிக்கின்றனரே, அவர் தம் சிந்தனை வேலை செய்தால், விளங்கும்—தென்னாட்டின் பரிதாபம். அவரும், விடுதலைபெறும்படை நோக்கி, உடனே தபாராவர்.

★

# சென்னையில் தலைமை நிலையம்

## 25—4—52-லிருந்து பணியாற்றும்

மூன்று மாதங்களாக, தி. மு. க. தலைமைநிலைய அலுவல்கள் எல்லாம் காஞ்சிபுரத்திலிருந்து கவனிக்கப்பட்டு வந்தன. இனி 25—4—52-லிருந்து சென்னை, ராயபுரம், 'அறிவகம்' இல்லத்திலிருந்தே, தலைமை நிலையம் இயங்க ஏற்பாடாகிவிட்டது. ஈரோட்டில் நடந்த பொதுக்குழு தீர்மானப்படி, தலைமைநிலையப் பணிகளைக் கவனிக்க அமைக்கப்பட்ட மூவர் கொண்ட குழு, தலைமை நிலைய நிர்வாகக் காரியங்கள் செவ்வனே நடைபெற முயற்சி எடுத்துக்கொள்ளும் தோழர் ஈ வே கி சம்பத் அவர்கள், இப்பணிகளைத் துரிதப்படுத்தி நடத்த 16—4—52-லிருந்து சென்னையிலேயே தங்கியுள்ளார். இனி சி. என். ஏ. வின் சொந்தப் பார்வைக்குரிய மிக முக்கிய கடிதங்கள் தவிர, மற்ற எல்லா கடிதங்கள், மணியார்டர்கள் முதலியவை பொறுப்பாளர், தி மு. கழக தலைமை நிலையம், 24, சூரியநாராயண செட்டித்தெரு, ராயபுரம், சென்னை என்ற முகவரிக்கு எழுத வேண்டுகிறோம்.




"அண்ணு!"

"தம்பி"

"ராமபிரான் என்று கூறுகிறுர்களே, அவன் யார் அண்ணு?"

"ஆரிய வேந்தன் என்று சரித்திரம் கூறுகிறது தம்பி"

"அவன் தந்தை தசரதனைப்பற்றிச் சிறிது கூறுங்கள் அண்ணு!"

"நீ ராமாயணம் படித்ததில்லையோ......"

"ஓ! படிச்சிருக்கேன். இருந்தாலும் நீங்கள் சொல்லுங்களண்ணு!"

"தசரதன் அயோத்தி வேந்தன். மூன்று பட்டமகிஷிகள் அவனுக்கு. அறுபதினுயிரம் பேரை அணைந்து மகிழ்ந்தானும்."

"அதுமட்டும்தானு, அண்ணு?"

"பெண்புத்தி கேட்பவன்—முன்புத்தியில்லாதவன் என்றும் புராணக்கதைகள் கூறுகின்றன."

"சரி — அவனுடைய சம்மந்தி ஜனகன் எப்படி அண்ணு?"

"ஊர் பற்றி எரியும்போது வேத பாராயணம் செய்தாராம் — அந்த ராஜரிஷி"

"அப்படியா?"

"ஆமாம்!"

"ராமன் ஆரிய குலமகிபன். தசரதன் அவசாபுத்தியுள்ளவன். ஜனகன், மக்களைக் கவனியாத மன்னன் அப்படித்தானே?"

"ஆமாம்! புராணங்கள் இவ்விதம் தான் சொல்லுகின்றன."

"ஏண்ணு! இந்த மூன்றுபேருடைய குணுதிசயங்களையும்கொண்டு ஒரு மனுஷன் இருந்தால் அந்த ஆசாமியை என்னவென்று சொல்வீர்கள்"

"சொல்வதென்ன! எவரும் ஏசத்தான் செய்வர்—"

"அதாவது, புகழுச்குப் பாத்திரமான குணங்களல்ல அவை, அப்படித்தானே?"

"ஆமாம்!!"

"நமது முதலமைச்சர் ஆச்சாரியார் இத்திருக் கல்யாணகுணங்கள் உள்ளவராம்"

"சே! நீ எப்பொழுதும் குறும்பன். கூறியது யார் அப்படி?"

"நானல்ல அண்ணு! செங்கல்வராயன், சென்னை கடற்கரைக் கூட்டத்தில்"

"என்ன சொன்னுர்?"

"தசரதரும் ஜனகரும் ஒருரு வெடுத்துவந்தவர் ராஜாஜி"

*　*　*

[அக்கிரகாரத்தில்]

"ஓய்! பார்த்தீரேல்லீயோ—நம்மளவர்ஞ நம்மளவர்தான் ஓய்!! பிராமண புத்திதீட்சண்யம் போயிடுமோ — பொதுக் கூட்டத்திலே பேச ஆரம்பிச்சதும் எப்படித் துவங்கினுர் கவனித்தீரோ?"

"கவனிச்சேன்—சாங்கோபாங்கமாக வந்தார்—அமர்ந்தார்—"

"அதையல்ல ஓய்! அவர்பேச ஆரம்பிச்சாரே அதைக் கேட்கிறேன்......"

"மழைவேணுமா்ஞ கடவுளைக் கும்பிடணும், அப்படின்ஞரே—அதைச் சொல்றீரா?"

"அதையல்ல ஓய்! அவர் பேச ஆரம்பிக்கறப்போ......"

"ஞாபகம் வர்றது 'ஆசீர்வாதம்' அப்படின்ஞர்"

"யாரைப்பார்த்து?"

"மகாஜனங்களைப் பார்த்து. இதிலென்னஓய் இருக்கிறது"

"உம்ம மூளையும் அந்த விருதுநகராணுட்டமே ஆயிட்டுதுங்காணும்—சூட்சும புத்தியே தூரபோயிடுத்தே உமக்கு."

"நேக்கு எல்லாம் சரியாத்தான் இருக்கு — விஷயத்தைச் சொல்லும்"

"கூட்டத்திலே பிரசங்கம் செய்யறவா, ஆரம்பிக்கிறப்ப என்ன சொல்லுவா?"

"வணக்கம்... அப்படீன்னு ஆரம்பிப்பா!"

"ஓய்! அது. அவன்க ஐயா காங்கிரஸ்காரர் எப்பம துவங்குவா?"

"'நமஸ்காரம்' அல்லது 'ஜேஹிந்த்' இல்லேன்ஞ 'வந்தேமாதரம்'"

"இதுதானே வழக்கம்!"

"ஆமாம்!"

"ஆனல் எப்படி ஆரம்பிச்சார் நம்மளவர்"

"புரியுது ஓய் புரியுது!"

"புரிஞ்சுண்டு வாழ்ந்தீர்... 'ஆசீர்வாதப்'னு எல்லோருக்கும் பெரியவர்தானே சொல்வா."

அதனுல்தான் அவரும் சொன்ஞர்!"

"ஏன் சொன்ஞர்?"

"இதென்னய்யா! அவர் பெரியவர்"

"இருக்கலாம்யா — ஏன், 'ஆசீர்வாதம்'னு ஆரம்பிச்சார்"

'மற்றவர்களைவிட உயர்ந்தவர்ங்கிறதை தெரிவிக்க......"

"சூட்சுமம் புரியுதோண்ணேன்!"

"புரியுது ஓய் புரியுது! சாணக்கியர்ஞ சாமான்யமா, என்ன? ஒரே சொல்—உயர்ந்துட்டாரே."

"தந்திரம்னு இதுக்குத்தான்யா, பேர்—இதுக்குத்தான்"

*　*　*

[தமிழ்நாடு. காங்கிரஸ் கமிட்டி ஆபீஸ்]

"பிரதர்! பார்த்தீங்களா சி. ஆர். பேசினதை"

"பார்க்கிறதா? கேட்டேன் பிரதர் கேட்டேன்!"

## கழகத் தோழர்களுக்கு

கழகச் சொற்பொழிவாளர்களுக்குப் பொதுக் கூட்டங்களிலும் பிற நிகழ்ச்சிகளிலும் மாலை போடும் கிளைக்கழகத் தோழர்கள், இனி மாலைபோடாமல், மாலைக்குரிய தொகையையோ அல்லது முடிந்த அளவு தொகையையோ "தேனிக் கலவர வழக்கு நிதிக்கு" என்று சொல்லிக் கொடுத்தால் பயன் தரும் செயலாகும். அப்படிச் சேரும் தொகையை உடனுக்குடன் அனுப்பிவைக்கும்படி கூட்டங் கூட்டும் கிளைக்கழகச் செயலாளர்களையும், சொற்பொழிவாளர்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்
பொறுப்பாளன்
தேனிக்கலவரவழக்குநிதி

"தென்னாட்டு காங்கிரஸ் சாக்கடையாமே!"

"ஆமாம் பிரதர்! என்ன அகம்பாவம் பார்த்தீங்களா?"

"மனுஷன் என்னவெல்லாமோ பேசறாரே — இடங் கொடுத்ததும் மடத்தைப் பிடுங்கறதைப்போல"

"என்ன செய்றது!"

"என்மனம் பதறிச்சு பிரதர் — எவ்வளவு பாடுபட்டோம்! பலனில்லையே......"

"இங்குமட்டுமா. எங்கும்தான் இல்லே. இந்திய நாடு முழுமையும் தான் இல்லே. இது தெரியாத ஆசாமியா சி. ஆர்."

"நல்லாத் தெரிந்தவர்"

"பின்னே ஏன் தென்னாட்டுகாங்கிரசைமட்டும் சாக்கடைன்னாரு?"

"திருச்செங்கோட்டு சங்கதியாலா?—வருஷம் ரொம்ப ஆச்சே அது நடந்து"

"ஆறா? மனக்காயம் ஆறிடுமோ! அதுதான், பேசறார், இப்போ"

"ஒரேயடியா, சாக்கடைன்னுட்டாரே......"

"வயிறு எரியுது பிரதர்! நம்ப எத்தனைபேர் கஷ்டப்பட்டோம். காமராஜ் அண்ணாச்சி எவ்வளவு சுத்தினாரு, சுப்பையாவும் உபயதுல்லாவும் எங்கெங்கே பேசினாங்க, சிவஞானம் 'டிவிஷன்' வேறே ஊரூரா ஓடுச்சு, எப்படியெப்படி பாடுபட்டோம்! இவர், ஒய்யாரமா உட்கார்ந்துண்டிருந்துட்டு இப்ப வந்து சொல்றாரே சாக்கடைன்னு"

"மானம் போவுது பிரதர்! மனுஷன் பழிவாங்க ஆரம்பிச்சுட்டாரா— எங்கே காமராஜ் அண்ணாச்சி!"

"அதோ மூலையில் உட்கார்ந்திருக்கே"

* * *

[நமது அலுவலகத்தில்]

ஆபீஸ்பையன்:- சார்! சாக்கடையில் எதெது சார் கிடக்கும்?

ப:- ஏம்பா!

ஆ. பை:- சொல்லுங்கள் சார்.

ப:- எருமை, பன்றி,......

ஆ. பை:- போதும் போதும் சார்!

ப:- சாக்கடை விசாரணை எதுக்கப்பா உனக்கு?

ஆ. பை:- காங்கிரசைசாக்கடைன்னாராமே ஆச்சாரியார்...

ப:- ஒகோ!!!

ஆ. பை:- இன்னொரு சந்தேகம் சார். காங்கிரஸ் எம். எல். ஏக்கள் மொத்தம் எத்தனை பேர்?

ப:- 152.

ஆ. பை:- காங்கிரசிலிருந்து வந்தவங்கதானே சார் இவங்க?

ப:- ஆமாம்! அதிலென்ன ஐயம் உனக்கு?

ஆ. பை:- கோபிச்சுக்காதீங்க சார்! சாக்கடையிலிருந்து எதெது சார் உற்பத்தியாகும்?

ப:- கொசு, ஈ, புழு,

ஆ. பை:- இப்பவந்திருக்கிற எம். எல். ஏக்களெல்லாம் இந்த ரகம் தான். இல்லீங்களா?

* * *

[சென்னை செகரட்டேரியட்]

"நம்மையெல்லாம் மனித இனமாகவே மதிக்கலியே-இந்த சி. ராசகோபாலாச்சாரி"

"எப்படீங்க?"

"எப்படியா! நாம்எல்லாம் எங்கே வேலைசெய்கிறோம்?"

"செகரட்டேரியட்டில்!"

"செகரட்டேரியட்டில் தானே?"

"ஆமாம்!"

"இதுதானே சென்னை நிர்வாக இயந்திரம் இருக்கும் இடம்"

"ஆமாம்!"

"இதை இயக்குவது நாம்தானே"

"ஆமாம்!"

"சரி. காட்டில் என்ன இருக்கும்"

"இதென்ன மிஸ்டர் கேள்வி! மிருகங்கள் இருக்கும்"

"செக்ரடரியேட்டை காடுஎன்று சொல்கிறாரப்பா - ராஜகோபாலாச்சாரி."

"அப்படியா? என்ன மமதை மிஸ்டர்!"

"என்ன செய்றது! ஊம்..."

★

# ஒரே தறியும் ஒட்டுத் துணியும்

"நாங்கள் 152 பேரல்ல —155 பேர் ஆனால் இது ஒரு தறியில் நெய்த துணி. ஆனால் ஐக்கிய ஜனநாயக முன்னணியோ பல தறியில் நெய்து ஒட்டுப் போட்டு நெய்த துணி"

என்று, சென்னை கடற்கரையில் பேசிய காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டாராம். காங்கிரஸ் சட்ட சபைக் கட்சியைத் தான், 'ஒரு தறியில் நெய்த துணி' என்று உபமானம் தந்து உரைத்திருக்கிறார்—பாரத புத்திரர். ஒரே தறி! ஒரே துணி!! பாரத மாதாவின் மைந்தர்கள் தயாரித்தது. பார்க்கிறோமல்லவா நீல நிறப் புடவை, நீல நிற ஜாக்கெட் என்று இரண்டும் ஒரே விதமாக அணிந்துலவுவோரை!! அந்த அழகு, தந்திருக்கிறோம், பாரத மாதாவுக்கு என, மைந்தர் புகன்றிருக்கிறார்—போற்றக் கூடியது தான் — உண்மையாகயிருந்தால்! ஆனால், பாபம், அவர்கள் மாதாவுக்கு போர்த்தியிருக்கும் துணி எப்படியிருக்கிறது தெரியுமோ? ஒரே தறியில் நெய்ததாம்! ஆனால் 'மாணிக்கவேல்' தேவைப்பட்டிருக்கிறது; சில பாகங்களை மறைக்க!! இன்னும் பல 'கஜம்' தேடப்படுகிறது—பல இடங்களை மறைக்க! ஒரே தறியில் நெய்ததுதான்— ஆனால் உடம்பெல்லாம் சுற்றக் கூட போதவில்லை—மாதா பரதவிக்கிறாள்! மைந்தர்கள் அலைகிறார்கள், எங்கெங்கே எது எது கிடைக்குமென்று. எனினும் பெருமையோடு 'சிலப்பம்' ஆடியிருக்கிறார் வார்த்தைகள் மூலம்.

ஐக்ய ஜனநாயக முன்னணி பல தறிகளில் நெய்யப்பட்டது! ஆனால் பாதி உடலோடு நின்றுவிடுவதில்லை — கானுக்குப் போதாமல் மேலுடம்பை மறைக்காமல் இடுப்புக்கு மேல் இழுத்துக்கொண்டு இல்லை, அது. உடம்பை மறைப்பதாகயிருக்கிறது! மானத்தைக் காக்குமளவில் இருக்கிறது!! இதை மறந்துவிட்டுப பேசியிருக்கிறார், அவர். பாவம்!

❀

2-ம் பக்கத் தொடர்ச்சி

வோம். துணியும் பயம் ஏன்? பதவி பெரிது தாமஸ்!''

பதவியாசைக்குப் பலியானான், தாமஸ் வெண்ட்வொர்த். தான், ஏந்திய கொள்கையைத் துறந்தான். தன்னை நம்பிய மக்களை மறந்தான். மக்கள் மத்தியில் பவனிவந்தபோது அவர்களிடம் தான் தந்த உறுதி மொழிகளை, காற்றிலே பறக்கவிட்டான்: பதவி ஏறினான்! விரோதி யெனக் கர்ஜித்த அரசனுக்குப் பக்கத்திலே நின்றான்!

''துரோகி! துரோகி!!''

''சுயநலக்காரன், சூதுமதியன்!''

''அயோக்கியன் அற்பன்!''

தாமஸ் வெண்ட்வொர்த்மீது, இத்தகைய அனல்குழம்பை வீசிற்று—நாடு. அவனோடு மக்களுக்காகப் பணிபுரிந்தோரெல்லாம், திகைத்தனர் 'சீச்சி! என்ன கேவலம் இது?' என்று பேசினர். தாமஸோ தெம்மாங்கு பாடினான்! சிரிப்பு மலர்ந்து கொண்டிருக்குமாம் அவன் முகத்தில், மக்கள் மத்தியில் உலவிய போது. இப்போது சிரிப்பு போயிற்று — சீறும் புலியானான். வீரம் ததும்புமாம் முகத்தில்முன்பு —இப்போது வெறி தாண்டவமாடலாயிற்று. பதவியாசைக்குப் பலியான அவனைப் பார்த்து பலர் கேட்டனர், இதுபோல.

''சரிதானா தாமஸ்! இப்படிச்செய்யலாமா நீ? நம்பினோரை நட்டாற்றிலாவிடுவது''

''மக்களுக்காகத்தான் பதவியேற்கிறேன்!''

''விரோதியின் பக்கம் சேர்ந்து வீணாவதா?''

''எங்கே வீணன் ஆனேன்! மன்னன்பக்கம் ஏன் சேர்ந்தேன் தெரியுமோ? எல்லாம் மக்களுக்காகத்தான் — பதவிமூலம் மக்களுக்கான நன்மைகளைச் செய்யலாமல்லவா!''

இப்படி பசப்பினான்—பலரிடம். ஆனால் விரைவில் பெரும் நெருப்பானான்!

தன்னை எதிர்த்தோரையெல்லாம் துவம்சம் செய்தான் — தூக்கிலிட்டான்—தண்டித்தான — சிறைக்குள்போட்டான். மன்னன் மமதை வளரும் வழிகளையெல்லாம் சொன்னான் சார்லசுக்கு. மக்கள் கொதித்தனர், துரோகியின் செயல் கண்டு! மகிழ்ந்தான் மன்னன், தன்தந்திரம் பலித்ததுகண்டு-தாமஸுக்கு புகழ்ப் பட்டம் தந்தான் 'ஸ்ட்ராபோர்டு பிரபு'வாக ஆக்கினான்.

பதவிக்குப் பலியான வெண்ட்வொர்த், மன்னனின் 'ஏவல்நாய்' ஆனான். எப்படியெப்படி மன்னனுக்குப்பணம் திரட்டித்தர முடியுமோ, அந்த வழிகளையெல்லாம் கையாண்டான். மக்கள் துடித்தனர்! பலர் வரிகொடா இயக்கம் நடத்தினர்—பார்லிமெண்டு இல்லாத நேரத்தில் பணத்தைக் குவித்துவிட வேண்டுமென்ற ஆவலால் துடித்த சார்லஸ், பலப்பல வழிகளைக் கையாண்டான்.

இந்த வழிகளால் வதையுண்டமக்களோ, 'எரிமலை' ஆகிக்கொண்டிருந்தனர். எங்கும் எரிச்சல் — எதிர்ப்பு — ஆத்திரம் மலைபோல வளர்ந்துகொண்டிருந்தது. இந்த அதிருப்தியைச் சமாளிக்க ஒரு பக்கம் படையும் திரட்டவேண்டியவனானான். புதுப்படைகளைப்போஷிக்கப் பணம் வேண்டுமே! மேலும் புதுத்தொல்லைகள் பெருகலாயின— மக்கள் மன்றத்தில்.

இத்தொல்லைகளில் ஒன்றுதான், ''கப்பல் பணம்'' கோரியது. புதிய கப்பற்படை தேவையென்றும் அக்கப்பல்களைக் கட்ட மக்கள் பணம் தரவேண்டுமென்றும் நிர்ப்பந்தித்தான்.

''தாயகம்இங்கிலாந்தின்பெருமை பெரியதாயிற்றே — நல்லகப்பல்கள் வேண்டாமோ! தாருங்கள்! தாருங்கள்!!''

என்று, நயவஞ்சகமாகப் பேசினான். ஆனால் அவன் நாச எண்ணம் விளங்கிற்று மக்களுக்கு. ஆகவே, அட்டகாசத்தை எதிர்க்க ஆவல் கொண்டனர். கப்பல்பணம் கட்ட முடியாதெனக் கர்ஜித்தான் ஜான் ஹாம்டன் எனும் பொதுநலத் தொண்டன்! அவன் மூட்டிய தீ, பரவலாயிற்று. பார்த்தான், சார்லஸ் ஹாம்டனை இழுத்துவந்தான்—தண்டித்தான்—சிறைக்குள் தள்ளினான். சிறைக்கும் சித்ரவதைக்கும்அடங்குவதல்லவே சுதந்திரகீதம்! எங்கும், 'வரிகொடோம்!' எனும் நாதம் கிளம்பலாயிற்று. மக்கள் புலிகளாயினர்! அதிருப்தி சூறாவளியாக ஆயிற்று!!

மக்களை இம்சிக்க, தாமஸ் வெண்ட் வொர்த்தைத் துணையாகக்கொண்டதோடு, சார்லஸ் இருந்துவிடவில்லை. மற்றொரு நண்பனையும் பெற்றிருந்தான் — அவன் சாதாரணமானவனல்ல — மக்கள் பணிந்து வணங்கும் தன்மை பெற்றவன்—மதகுரு! ஆர்ச்பிஷப்!! வில்லியம்லாட் எனும் பெயரினன். இவனையும் ஒருபக்கம் துணையாக்கிக்கொண்டான். ''கர்த்தரின் சேவைக்குக் காலத்தை ஒப்பித்தேன்'' என்று பாமரரிடம் பேசித் திரிந்த மதகுரு, மன்னனின், கையாளானான். மன்னனின் கொடுங்கோன்மைகளை மந்தமாருதம் எனப் பிரச்சாரம் செய்தான்—

''மக்களே! மதோன்மத்தர்கள் கையில் சிக்கிடாதீர்கள். அராஜகம் பெருகலாமோ. மன்னனை மதியீர்களாக. மன்னனென்றால் யார்? கர்த்தரின் பிம்பமல்லவோ! பரமண்டலத்துதரைப் பணியாது விடுவது ஆகுமோ? பாவமல்லவோ!'' என்று போதிக்கலானான் மக்களிடத்தில். ''மகான்!'' — ''மதகுரு!!'' இந்தச் சொற்களால் அலங்கரிக்கப்பட்ட, ஆர்ச்பிஷப், கர்த்தர் பெயரைச் சொல்லி, மன்னனுக்கு ஆதரவு தேடலாயினர். மக்களோ, துடிக்கும் வயிற்றையும் கொதிக்கும் குடும்பத்தையும் காட்டலாயினர்.

''கொடுங்கோன்மை செய்கிறான், தேவா!''

''சேச்சே! அப்படிச் சொல்லாதீர்கள். மன்னன் செய்வது கொடுங்கோன்மையல்ல — மக்களுக்காகத்தான் பாடுபடுகிறான்''

''எங்களை இம்சிக்கிறானே!''

''இல்லை! இல்லை!!—உங்களை வாழவைக்க விரும்புகிறான். அதனால் சிறிது சஞ்சலம் ஏற்படத்தான் நேரும். ராஜ்யபாரம் பெரிதல்லவோ?''

''அதற்காக நாங்கள் வாடுவதா?''

---

சேலம் கழகத் தோழர் கே. வி. நாகரத்தினம் மனைவியார் தோழியர் சரோஜனி அம்மைக்கு 16-3-52ல் பிறந்த ஆண்குழந்தைக்கு தோழர் மு. கருணாநிதியால் 30—3—52 அன்று 'அழகிரி' என்று பெயர் சூட்டப்பட்டது.

"ஏன் வாடவேண்டும்! சிரமத்தை சிறிது மறக்கக் கற்றுக்கொள்ளுங்கள். மாதாகோவிலுக்கு வாருங்கள் பரமண்டலத் தூதரைத் துதியுங்கள். பாபம் அகலும்! நாடு செழிக்கும்!!"

மக்களிடத்திலே பரவியிருந்த மதபோதையால், அவர்களை அடிபணிய சாகசம் செய்தான், 'மகான்' வேடந்தாங்கியவன்.

* * *

கொதிக்கும் தீயை குளிர்க்காற்று தடுத்துவிடவா முடியும்? அடக்குமுறை ஒருபக்கம்! அது கர்த்தர் திருவிளையாடல் எனக் கதைக்கும் மதகுரு ஒருபக்கம்!!—இரண்டுக்குமிடையிலே தவித்த மக்கள், எரிமலையாயினர். வரிகேட்டு வதைக்கும் மன்னன் — அவனுக்கு ஆதரவாகயிருக்கும் மக்கள் துரோகி—அவர்களுக்கு 'தெந்தின' பாடும் 'பூஜாரி'. இந்த குழப்ப நிலையில் இங்கிலாந்து சீரழிந்தது! மக்கள் மனங்கொதித்தனர்!! மன்னனுக்கோ, தனது முறைகள், யாவும் பலனளிக்காதது விளங்கிற்று. பணமோ தேவைப்பட்டது! 'பார்லிமெண்ட் சென்னால்தான் பணம்' என்று கூறுகின்றனர் மக்கள். பார்லிமெண்ட் கூடியோ பதினொரு ஆண்டுகள் ஆகிவிட்டன. சிந்தை குழம்பினன் சார்லஸ்! கடைசியில் எதுவும் செய்ய இயலாமற்போகவே கலைத்த பார்லிமெண்டை 1640-ல் மீண்டும் கூட்டினன். "நீண்டகால பார்லிமெண்டு" (Long Parliament) என்றழைக்கப்படும், இது, பல்லாண்டுகள் நீடிக்கலாயிற்று. சிறைக்குள் தள்ளி சித்திரவதை செய்யப்பட்ட மாவீரன் ஹாம்டன் இப்பார்லிமெண்டிற்கு, தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான் — ஆம்! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டான். மன்னனும் துரோகிகளாலும் துயருக்கு ஆளான மாவீரன் மக்கள்தலைவனானன்!! இவனது தலைமையில் கூடிய பார்லிமெண்டு, சார்லஸின் போக்கைக் கண்டித்தது—மன்னனது மந்திரிசபை செய்த ஊழல்களை அம்பலமாக்கியது. 'தாமஸ்—ஒரு துரோகி' எனப் பறைசாற்றினர், பார்லிமெண்டு உறுப்பினர்கள். மக்களை வஞ்சித்த, தாமஸ் கலங்கினன். 'வந்துவிட்டதே விபத்து' எனக் குமுறினன். பார்லிமெண்டிலமர்ந்தோரோ, துரோகிகளை ஒழிக்கவேண்டும் என்று முரசொலித்தனர்.

"தாமஸ் வெண்ட் வொர்த் ஒரு துரோகி— மன்னன்பக்கம்சேர்ந்து மக்களை வஞ்சித்த மகாபாதகன்-அவனை விட்டு வைத்தல் கூடாது. ஆகவே, அவனுக்கு மரணதண்டனை தர வேண்டும். துரோகி தொலைக்கப்பட வேண்டும்" என்று சட்டம் செய்தனர். பார்லிமெண்டு, பரவசத்தோடு நிறைவேற்றிற்று இந்தச்சட்டத்தை. பார்த்தான் சார்லஸ். பரதவித்தான் தாமஸ்.

"மன்னா! பார்த்தீரா?" என்றான், பதைப்போடு.

"என் செய்வேன். ஸ்ட்ராபோர்டு?"

"என் செய்வீரா? உமக்காக எவ்வளவு பாடுபட்டேன்! நீர் வாழ, நான் மாள்வதா! சார்லஸ்—இதுவா உமது பதில். 'என் செய்வேன்' என்கிறீரே—இதற்கா நான் இவ்வளவு கஷ்டப்பட்டேன், உதவி செய்தேன்."

கதறினான், துரோகி. சார்லஸ் எதுவும் கூறவில்லை. எது கூறினும் ஏற்கும் நிலையில் இல்லை—பார்லிமெண்டும், நாடும். நாட்டோர் கொதித்தனர் — 'எங்களை வஞ்சித்த மகாத் துரோகி' என்றனர் தாமஸை. "துரோகிகளிருப்பது நாட்டுக்கு ஆபத்து" என்றனர்.

"வாழ்க இவன் என்று முழக்கமிட்டோம்! எமது வாழ்த்தொலியால் தலைவனான இவன் எம்மைவஞ்சித்தான்! துரோகமிழைத்தான்—பதவிக்குப் பலியானான். பாதவிக்கச் செய்தான்! பாவி!! மகா பாவி!!" என்றது, நாடு.

தாமஸ், கலங்கினான் கைகளிலே விலங்கிடப்பட்டு, பலிபீடம் கொண்டு செல்லப் பட்டபோது. பார்த்தான் மக்களை! காரியுமிழ்ந்தனர், அவர்கள்!! நினைத்தான், சார்லசை! நெஞ்சம் துடித்தது!!

"கெட்டேன்! தொலைந்தேன்! நம்பினர் மக்கள். நயவஞ்சகனானேன். வாழ்த்திய கரங்களை வெட்டினேன். மிருகமாக நடந்து கொண்டேன். எதிரியுடன் சேர்ந்தேன்—சரியான தண்டனை எனக்கு. தாயகத்தை வஞ்சித்த எனக்கு சரியான தண்டனை! நான் கொல்லப்படப் போகிறேன்—என்னை 'தலைவர்' என்று கூவியழைத்த மக்கள் இன்று கொதிக்கின்றனர். மலைபோல் வாழ்ந்தேன்! இன்று மண்ணாகிவிட்டேன்!! மரணம் எனக்கு. மன்னன் வாழ்கிறான். மக்களை மதியாத மரமானேன்—மாளப் போகிறேன். சிறு காயமென்றாலும் 'ஐயோ! ஐயோ!' என்று அலறிதுண்டு மக்கள்—நான் துரோகியாகாதபோது. அன்று கண்ணீர் சிந்திய மக்கள் இன்று ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றனர். ஐயோ! நான் சாகிறேன். பதவி ஆசையால் பலியானேன்—துரோகியானேன்—'தூ! தூ!!' எனகாரியுமிழப்பட்டேன். சாகப்போகிறேன்—இல்லை! இல்லை!!—கொலை செய்யப் படப் போகிறேன். மக்கள் மன்றம் ஓர்வான்—அது என்னை மாய்க்கப் போகிறது. பலிபீடம் என்னைப் பார்த்துச் சிரிக்கிறது! தாயகமே, இத்தறுதலையை, மன்னித்துவிடு. நான் போகிறேன் — இனியாவது என் போன்றோர், இல்லாமலிருக்கட்டும், இங்கு—எனது சாவு ஒரு எச்சரிக்கையாகயிருக்கட்டும்—மக்களே மன்னர்களை நம்பாதீர்கள்! நம்பாதீர்கள்!!"

என்று கதறினான்-பலிபீடத்தில் நின்றுகொண்டு.

துரோகியின் தலையை துண்டாடிற்று, மக்களின் கொதிப்பு. தொலைந்தான், சுயநலத் துரோகி—பதவி வெறிக்குப் பலியான, இவனது கதியே, 'கஷ்டமா! கடவுளை வணங்குவீர்' என்ற மதகுருவுக்கும் தரப்பட்டது — பிறகு. கொடுமை புரிந்த சார்லஸும், கடைசியில் இதே கதிதான் பெற்றான்.

———

மகிழ்ச்சிகரமான செய்தி!

'கிளர்ச்சி'

(இரா. சு. தங்கப்பழம்)

மே 15 முதல் மீண்டும் வருகிறது.

"கிளர்ச்சி"

திருமங்கலம் (மதுரை Dt.)

ஈரோடு பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட மற்ற (முன்இதழில் வந்ததுபோக) தீர்மானங்கள்:—

(1) திராவிட முன்னேற்றக் கழகத் திட்டத்திடத்துநீங்காப்பற்றும் அணியா ஆர்வமுங்கொண்டு, கழக நடவடிக்கைகளில் தீவிர பங்கு பெற்றுப் பணியாற்றி வந்த சீரிய தோழர்களான உடுமலை கனகராஜ், சேலம் வள்ளியப்பன் ஆகியோர் எதிர்பாராத வகையில் இயற்கை யெய்தியது கேட்டு இப்பொதுக் குழு வருந்துவதுடன் அவர்களின் குடும்பத்தாருக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

(2) அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில், நெல்லிகுப்பம் தொகுதியில் காங்கிரசுக்கு மாறுபாடாகத் தேர்தல் பணி ஆற்றினர் என்ற காரணத்தை உள்ளடக்கிக் கொண்டு, தி. மு. கழகத்தைச் சார்ந்த தோழர் மஜீத் என்ற இளைஞரை காங்கிரஸ் 'தியாகி' ஒருவர் மூலம் குத்திக் கொலை செய்யப் பட்டதை, அரசியல் அநாகரீக மிருகச் செயலாகக் கருதி, அதனை வன்மையாகக் கண்டிப்பதுடன், தோழர் மஜீத் அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கு பொது நிதி திரட்டித் தரும் முயற்சியை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்கிறது.

(7) சிறுபான்மையினராகவெற்றி பெற்று வந்திருக்கும் காங்கிரசாரை சென்னை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தும் நோக்கத்தோடு, ஜனநாயகப் பண்பைப் புறக்கணித்துத் தோழர் சி. இராசகோபாலாச்சாரியாரை முறையில்லாத வழியில் சென்னை மேல் சபை உறுப்பினராக்கியிருக்கும் செயலை வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தச் செயலைக் கண்டிக்கவும் மாற்றவும் எடுக்கப்படும் தக்க முயற்சிகளுக்கு முழு ஆதாவு தருவது என்றும் இப்பொதுக் குழு தீர்மானிக்கிறது.

8. (a) காங்கிரஸ் ஆதிக்க வெறுப்புணர்ச்சியை பொதுமக்கள் வெளிப்படையாகவே பொதுத் தேர்தலின் வாயிலாகக் காட்டிய பிறகும், காங்கிரஸ் ஆதிக்கத்தைமீண்டும் வலுக்கட்டாயமாகத் திணிக்கவேண்டுமென்றகெட்ட நினைப்புடனும், ஆட்டங்கொடுத்து வரும் வடநாட்டு ஆதிக்கத்தைச் சரியாமல் பாதுகாக்கும் நோக்குடனும், ஒரு வடநாட்டுக் காங்கிரஸ் காரரை, சென்னை கவர்னராக நியமித்த அடாத செயலை, இப்பொதுக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

(b) கவர்னர் நியமனத்தைக் கண்டித்து கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றிய முற்போக்குக்கழகங்களை இப்பொதுக்குழு பாராட்டுகிறது.

(9) கழகத்தின் சட்டதிட்டப்படி புதிய அமைப்பை உருவாக்க கீழ்க்கண்டவர்களடங்கிய தனிக் குழுவை இப்பொதுக்குழு நியமிக்கிறது.

குழு உறுப்பினர்கள்:—

(1) ஈ. வே. கி. சம்பத்
(2) கே. ஏ. மதியழகன்
(3) எஸ். எஸ். பி. லிங்கம்

(12) (a) பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பிடியிலிருந்து எகிப்தை மீட்க நடத்தப்படும் விடுதலைக் கிளர்ச்சியை இப்பொதுக்குழு ஆதரிக்கிறது.

(b) டுனீஷியாவில் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் மக்களின் விடுதலைக் கிளர்ச்சியை நசுக்கி, மக்கள் சர்க்காரின் தலைவர்களைக் கைது செய்து, அடக்குமுறை வெறியாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் போக்கை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், கொடுமைக்கு ஆளான டுனீஷியா மக்களுக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, டுனீஷியமக்களின் விடுதலைக் கிளர்ச்சி வெற்றி பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

(13) இராயலசீமாவில் பயங்கரமான அளவிலும், மற்ற மாவட்டப் பகுதிகளில் கவலை தரத்தக்க அளவிலும் பரவிக்கொண்டு வரும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் நிலைகண்டு இப்பொதுக்குழு வருந்துவதுடன், இப்பஞ்சத்திற்குக்காரணமாக இருந்த ஆட்சி முறையை வன்மையாகக் கண்டிப்பதோடு, ஆங்காங்குள்ள முற்போக்காளர்கள் பஞ்சநிவாரணபணியில் ஈடுபடவேண்டுமாய் இப்பொதுக் குழு வேண்டிக்கொள்கிறது.

---

## திருச்சி மாவட்ட மாணவர் பயிற்சி வகுப்பு அறிவிப்பு

திருச்சிமாவட்ட தி மு. க. மாணவர் வகுப்பு லால்குடி தாலுக்காவில் அம்பில் என்ற சிற்றூரில் நடைபெற இருக்கிறது.

இயற்கை வளம் பொருந்திய அமைதியான இடம் பயிற்சி முகாமுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. கழக முன்னணி வீரர்கள் ஒவ்வொருநாளும் பயிற்சிதர ஒப்புதல் தெரிவித்துள்ளார்கள். அண்ணா அவர்களும் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்குவார்கள்.

நடைபெறும் நாட்கள் ஏப்ரல் 24, 25, 26, 27, ஆகிய நான்கு நாட்கள்.

முக்கிய குறிப்புகள்.

1. வகுப்பில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு தங்குமிட வசதியும், உணவு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.
2. வரப்போக வழிச் செலவுகள் மாணவர்களைப் பொறுத்தது.
3. வரும் மாணவர்கள் படுக்கை கொண்டுவர கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நான்கு நாட்களும் தங்குவது போல் வருதல் அவசியம்.

அம்பில், லால்குடியிலிருந்துநான்கு மைல் தூரத்தில் உள்ளது. போக்குவரத்து பஸ் வசதி உண்டு.

வகுப்பில் கலந்துகொள்கிறமாணவர்கள், திருச்சிமாவட்ட செயலாளர் நெ-9, கிலேதார்தெரு, என்ற முகவரிக்கு உடன்விபரம் எழுத வேண்டுகிறேன்.

பராங்குசம்,
திருச்சி மாவட்ட உ. செயலாளர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.